**அனுப்புநர்**

திரு.சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண்.020846 /எப்.1/2022** **நாள்: 23.02.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்ய தெரிவித்தல் – சார்பு.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்: 24.01.2023.

*****

பார்வையில் காண் கடிதத்தில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 24.01.2023 முதல் பிப்ரவரி முதல் வாரம் வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge1.tn.gov.in) சென்று பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மேல்நிலை முதலாம் ஆண்டு பள்ளி மாணவர்களின் விவரங்கள் அடங்கிய, Excel Format-ல் உள்ள பெயர்ப்பட்டியலினையும் (Nominal Roll), +1 Arrear மாணவர்களின் பெயர்ப்பட்டியலினையும் மற்றும் தனித்தேர்வர்களின் பெயர் பட்டியலினையும் (+1, +2) அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் 24.02.2023 p.m. பிற்பகல் முதல் தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
இயக்குநர்